# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:122** **தேதி:-01.08.2016**

# BSNLஐ தனியாருக்கு தாரை வார்க்க அனுமதியோம்
# 03.08.2016 ஆர்ப்பாட்டம்

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஆரம்பித்த நாள் முதலாய் இந்த பொதுத்துறை நிறுவனத்தை எப்படியாவது விற்றுவிட வேண்டும் என ஆட்சியாளர்கள் கங்கனம் கட்டிக் கொண்டு செயல்பட்டு வந்துள்ளன என்பது நம் அனைவருக்கும் தெரியும். புதிய தாராளமயக் கொள்கைகள் அமுலாக தொடங்கிய நாள் முதலாய் 'வியாபாரம் செய்வது அரசின் வேலை அல்ல' (DOING BUISNESS IS NOT THE BUISNESS OF THE GOVERNMENT) என்று பிரச்சாரம் செய்து வரும் நம் ஆட்சியாளர்கள் இந்திய நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களை மூடிவிடுவது அல்லது தனியார்மயமாக்கி விடுவது என்றே செயல்பட்டு வருகின்றனர்.

அரசுத்துறை நிறுவனமாக இருந்த தொலை தொடர்பு துறையை BSNL எனும் பொதுத்துறையாக மாற்றும் போது இந்நிறுவனத்திற்கும் அதன் ஊழியர்களுக்கும் பல்வேறு சலுகைகளை தருவதாக கூறினார்கள். ஆனால் காலப்போக்கில் அரசாங்கங்கள் செய்த நடவடிக்கைகள் தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதாகவே இருந்தது. குறிப்பாக ஆரம்ப கட்டத்தில் BSNL நிறுவனம் பெரும் லாபமீட்டும் நிறுவனமாகவே இருந்தது. ஆனால் அப்போதே ஊழியர்களை குறைக்க வேண்டும் என்றும் இந்நிறுவனத்தின் பங்குகளை விற்க வேண்டும் என்றும் பல முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் BSNLல் உள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் ஒன்று பட்ட போராட்டங்களால் அந்த முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டன.

தனியார் நிறுவனங்கள் மொபைல் சேவைகளில் பொது மக்களின் பணத்தை சூறையாடி வந்த நிலையில் BSNL நிறுவனம் தனது மொபைல் சேவைகளை கொடுக்க ஆரம்பித்த உடன் இந்நிறுவனங்களின் கொள்ளை தடுக்கப்பட்டது. BSNL நிறுவனம் குறைந்த விலையில் இந்த சேவையினை வழங்க ஆரம்பித்த காரணத்தால் தனியார் நிறுவனங்களும் விலையை குறைக்க வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டன. அந்த சமயத்தில் அரசாங்கம் BSNL நிறுவனத்தின் வளர்ச்சியை தடை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நிறுவனத்தின் விஸ்தரிப்பிற்கு தேவையான கருவிகள் வாங்குவதை பல்வேறு பொய்யான காரணங்களை சொல்லி நிறுத்தி வைத்தது. அதன் காரணமாக BSNLன் வளர்ச்சி தடைபட்டது. தனியார் நிறுவனங்கள் தொலை தொடர்பு சந்தையினை பெரிய அளவிற்கு கைப்பற்றின. BSNL நிறுவனம் வேக வேகமாக நஷ்டத்தை சந்தித்தது.

BSNL நிறுவனம் நஷ்டம் அடைவதற்கு அதிகப்படியான ஊழியர்கள் என்று பலரும் தவறாக பிரச்சாரம் செய்து வந்த நிலையில் BSNLன் வளர்ச்சியை கடந்த ஆட்சியாளர்கள்தான் முடக்கினார்கள் என முன்னாள் மத்திய தொலை தொடர்பு அமைச்சர்

திரு ரவிசங்கர் பிரசாத் அவர்களே கூறினார். அதே சமயம் BSNLல் உள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பான FORUM இந்நிறுவனத்தை காப்பாற்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. குறிப்பாக 'வாடிக்கையாளர் மகிழ்விப்பு வாரம்', மாதம் மற்றும் வருடம் என தொடங்கி இன்று "புன்முறுவலுடன் சேவை' என பல முயற்சிகளை மேற்கொண்டது. தற்போது கூட BSNL நிறுவனம் அறிவித்துள்ள 'இலவச ரோமிங்', 'இரவு நேர இலவச அழைப்புகள்' உள்ளிட்ட பல நல்ல திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டு போய் சேர்க்கும் வண்ணம் நாடு முழுவதும் 'பேரணி' என பல நிகழ்ச்சிகளில் ஊழியர்களையும், அதிகாரிகளையும் ஈடுபடுத்தி வருகின்றது.

FORUMத்தின் இந்த முயற்சிகள் காரணமாக 2013-14ல் 691 கோடி ரூபாய் OPERATIONAL LOSSல் இருந்த BSNL, 2014-15ல் 672 கோடி ரூபாய்கள் OPERATIONAL PROFITஆக மாறியுள்ளது. இது 2015-16ல் 2000 கோடி ரூபாய்களுக்கு மேல் OPERATIONAL PROFITஐ அடைந்துள்ளது. 2017-18ல் BSNL நிறுவனம் லாபமீட்டும் நிறுவனமாக மாறிவிடும் என நிர்வாகமே ஏற்றுக் கொண்டுள்ள சூழ்நிலையில் தான் நிதி ஆயோக் என்று சொல்லப்படும் அமைப்பு BSNL மற்றும் MTNL நிறுவனங்களின் பங்குகளை கேந்திர பங்குதாரர்களுக்கு (STRATEGIC BUISNESS PARTNER) விற்று விட வேண்டும் என பத்திரிக்கைகளில் செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்திய நாட்டின் மக்கள் சொத்தாக உள்ள பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்று விட வேண்டும் என்கின்ற மத்திய அரசின் திட்டத்தின் ஒரு பகுதிதான் இது. இதனை அனுமதிக்க முடியாது எனவும் இதனை எதிர்த்து போராடி முறியடிப்பது எனவும் BSNLல் உள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பான FORUM முடிவு செய்துள்ளது. இதன் ஒரு பகுதியாக வருகிற **03.08.2016 அன்று நாடு தழுவிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று FORUM முடிவு செய்துள்ளது**.

03.08.2016 அன்று நடைபெற உள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்து பகுதி ஊழியர்களையும், அதிகாரிகளையும் ஒன்று திரட்டி மிகச் சக்தியாக நடத்த வேண்டியது அவசியம். எனவே நமது மாவட்ட/ கிளை சங்கங்கள் FORUMத்தில் உள்ள அனைத்து சங்க நிர்வாகிகளையும் ஒன்றிணைத்து அனைத்து பகுதி ஊழியர்களையும், அதிகாரிகளையும் இணைத்து இந்த 03.08.2016 ஆர்ப்பாட்டத்தை சக்தியாக நடத்திட வேண்டும் என தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

ஒன்று பட்ட உறுதியான போராட்டங்களின் மூலமே அரசின் இத்தகைய முயற்சிகளை முறியடிக்க முடியும். எனவே ஒன்று படுவோம். உறுதியாக போராடுவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**